# ஐரோப்பிய ஒன்றிய தனியுரிமைக் கொள்கை

இந்த தனியுரிமைக் கொள்கை (கொள்கை), ஐரோப்பிய ஒன்றியம் ("EU") மற்றும் ஐரோப்பிய பொருளாதாரப் பகுதியிலுள்ள ஏவியேஜென் குழுவின் (ஏவியேஜென்) நிறுவனங்கள் மற்றும் செயல்களுக்குப் பொருந்தும் மற்றும் ஏவியேஜென் உங்கள் தனிப்பட்ட தரவுகளை எவ்வாறு சேகரித்துச் செயல் படுத்துகிறது என்பதை விளக்குகிறது. இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்வதன் மூலம், கொள்கையில் விவரித்தபடி, நீங்கள் எங்கள் கொள்கைகளை ஒப்புக் கொள்கிறீர்கள். உங்கள் தரவுகளைச் செயல்படுத்தக்கூடிய ஏவியேஜெனின் இறைச்சிக் கோழி இனப்பெருக்க வகைகளுக்கான தொடர்புத் தகவல்கள் aviagen.com/contact-us/.ல் கிடைக்கும்.

**நாங்கள் சேகரிக்கும் தகவல்களும் அவற்றைச் சேகரிக்கும் முறைகளும்:**

ஏவியேஜென், தன் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழில் நடத்தும் நபர்களின் தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்கிறது. சேகரிக்கப்படும் தரவுகள் முக்கிய தொடர்புத் தகவல்களோடு (எ.கா., பெயர், விலாசம், தொலை பேசி மற்றும் மின்னஞ்சல் முகவரி) மட்டுமின்றி, எங்கள் தொழிலுறவுத் தொடர்புகள் சம்பந்தமான தகவல்களும் உட்படக்கூடும். இந்தத் தகவலை எங்கள் விற்பனைகள், சந்தைப் படுத்துதல் மற்றும் கொள்முதல் செயல்கள், ஏவியேஜனின் இணைய தளம் மற்றும் நேரடியாக நிகழ்ச்சிகள், வரும் பார்வையாளர்கள் மூலமும், நாங்கள் சேகரிக்கிறோம்.

**தகவல்களை எப்படிப் பயன்படுத்துகிறோம்:**

எங்கள் வழக்கமான தொழிலுறவுகள் நடவடிக்கையில் (அதாவது, விற்பனைகள், சந்தைப் படுத்துதல், மற்றும் கொள்முதல்), நிறுவன நிதி மற்றும் நிர்வாகத்திற்காக மற்றும் சட்டத் தேவைகளுக்கேற்ப தனிப்பட்ட தரவுகளை நாங்கள் செயல் படுத்துகிறோம்.

எங்கள் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய முக்கிய மாற்றங்களை உங்களுக்குத் தெரிவிக்கவும், ஏவியேஜெனின் மற்ற சேவைகள், பொருட்கள், துணை நிறுவனங்கள் பற்றிய தகவல்களை வழங்கவும் கூட நாங்கள் உங்கள் தொடர்பு விபரங்களைப் பயன் படுத்துகிறோம். இந்த நோக்கத்திற்கு நீங்கள் தொடர்பு கொள்ளப்பட விரும்பாவிடில், தயவு செய்துinfo@aviagen.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

ஏவியேஜெனின் நிறுவனங்களிடையே, இந்த கொள்கைகளுக்கிணங்க நாங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடும். நாங்கள் தனிப்பட்ட தகவல்களை விற்பதில்லை.

**”குக்கிகள்”:**

ஏவியேஜெனின் இணைய தளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என அறியவும், அவற்றை மேம்படுத்தவும், நாங்கள் குக்கிகளை(உங்கள் இணைய உலாவியில் சேமிக்கப் படும் சிறிய உரைக் கோப்புகளை) பயன்படுத்துகிறோம். அவற்றை எப்படி செயலிழக்கச் செய்வது என்பதை உள்ளிட்ட, குக்கிகளைப் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவு செய்துwww.cookiecentral.comஎன்ற தளத்தைப் பார்க்கவும் . குக்கிகளைச் செயலிழக்கச் செய்தல், நீங்கள் ஏவியேஜெனின் இணைய தளங்களைப் பயன்படுத்துவதைப் பாதிக்கும்.

**இணைப்புகள்:**

ஏவியேஜென் இணைய தளம் மற்ற இணைய தளங்களுக்கான இணைப்புகளைக் கொண்டிருக்கக் கூடும். இந்த இணைப்புகளில் ஏதாவது ஒன்றின் மீது க்ளிக் செய்தால் நீங்கள் வேறொரு இணைய தளத்திற்குள் நுழைகிறீர்கள் என அறியவும். மற்ற தளங்களின் கொள்ளடக்கங்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல என்பதால், எங்கள் கொள்கையிலிருந்து மாறுபடக்கூடும் இந்த இணைப்பு தளங்களின் தனியுரிமைக் கொள்கைகளைப் படிக்க உங்களை ஊக்குவிக்கிறோம்.

AVIAGEN NORTH AMERICA • 920 Explorer Boulevard NW • Huntsville, AL 35806 • USA
*t:* 256.890.3800 • *f:* 256.890.3919 • *w:* www.aviagen.com

**பாதுகாப்பு:**
தனிப்பட்ட தரவுகளையும் (மற்ற தகவல்களையும்) அனுமதி பெறாத வெளிப்படுத்தல், திருத்தம் அல்லது அழிவிலிருந்து பாதுகாக்கத் தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை நாங்கள் பயன் படுத்துகிறோம். பாதுகாப்பான எங்கள் அமெரிக்க தரவு மையத்தில் உள்ள சேவையகங்களில் உங்கள் தனிப்பட்ட தரவுகளில் சில வைத்திருக்கப்படக்கூடும்.

**அமெரிக்காவிற்கு மாற்றல்:**
நாங்கள் சேகரித்த தனிப்பட்ட தரவுகள், நீங்கள் வசிக்கும் நாட்டின் தனியுரிமைச் சட்டங்களிலிருந்து மாறுபடக்கூடிய அமெரிக்காவிலுள்ள ஏவியேஜெனின் கணினிகளில் சேமிக்கப்பட்டு செயல்படுத்தப் படக்கூடும். அமெரிக்காவிற்கு மாற்றப்படக்கூடிய தரவுகள், ஐரோப்பிய ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமான ஒப்பந்தப் பிரிவுகளின். அடிப்படையில் அமைந்த ஏவியேஜென் நிறுவனங்கள் இடையே உள்ள ஒப்பந்தங்களுக்கு உட்பட்டவை.

**தரவு அணுகல், திருத்தல் அல்லது அழித்தல்:**
தரவு அணுகல் அல்லது திருத்தத்தைக் கோருவதற்கும் (தொடர்பு விபரங்களைப் புதுப்பித்தல் உட்பட), வேறொரு நிறுவனத்திற்கு தரவை மாற்றக் கோருவதற்கும் உங்களுக்கு உரிமைகள் உள்ளது. நீங்கள் எங்களுடன் தொழில் செய்யாவிட்டால் கூட, தொழில் மற்றும் சட்டக் காரணங்களுக்கு உங்கள் தனிப்பட்ட தரவின் சில பகுதிகளைக் காலவரையின்றி தக்க வைக்க எங்களுக்குத் தேவை இருப்பினும், நீங்கள் உங்கள் தனிப்பட்ட தரவை அழிக்கக்கூடக் கோரலாம். இவற்றில் எந்தக் காரணங்களுக்காகவும் தயவு செய்து எங்களை info@aviagen.comல் அல்லது ஏவியேஜெனின் இணைய தளம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**இந்தக் கொள்கைக்கு மாறுதல்கள்:**

அவ்வப்போது , எங்கள் தொழிலிலும் சட்டத்திலும் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்க நாங்கள் இந்தக் கொள்கையை மாற்றக்கூடும். நாங்கள் இந்தக் கொள்கைகளில் முக்கியமாக ஏதாவது மாற்றினால், உங்கள் விலாசம் இருக்கும் பட்சத்தில், உங்களுக்குத் தெரிவிப்போம்.

**உங்கள் உரிமைகளும் தொடர்பு தகவல்களும்:**

இந்தக் கொள்கை சம்பந்தமாக நீங்கள் கேள்விகள் கேட்க அல்லது புகார் செய்ய விரும்பினால், தயவு செய்து எங்களை info@aviagen.comல் மின்னஞ்சல் அல்லது ஏவியேஜென் இணையதளம் மூலம் தொடர்பு கொள்ளவும். ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தின் கீழ், உங்கள் தரவு செயல்படுத்தப்படுவதைப் பற்றி, உங்கள் நாட்டில் தரவு பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் புகார் செய்யக் கூட உங்களுக்கு உரிமை உள்ளது.